

தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அவர்களின், முத்தான திட்டமான "உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்ற தொகுதி, குன்னூர் நகராட்சி, மவுண்ட்ரோடு பகுதியில் மல்டி லெவல் கார் பார்க்கிங் அமைப்பதற்கான இடத்தினை தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு செய்தார். உடன் குன்னூர் நகர கழக செயலாளர் எம்.இராமசாமி, பொதுக்குழு உறுப்பினர், குன்னூர் நகர மன்ற தலைவர் ஷீலா கேத்தரின், தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில துணை செயலாளர், நகர மன்ற துணை தலைவர் பா.மு வாசிம் ராஜா, மாவட்ட பிரதிநிதி மணிகண்டன் எம்.சி. மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வினோத்குமார், பத்மநாபன்,மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் முருகக்குமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் தலைவர் ஜாஹிர் உசேன் எம்.சி., நகரமன்ற உறுப்பினர்கள் சையது மன்சூர், குமரேசன், ராபர்ட், நகர அவைத்தலைவர் தாஸ், நகர துணை செயலாளர் முருகேசன், கிளை செயலாளர் அப்துல் காதர், நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பிரவீன், சந்தீப், மது, மகாலிங்கம், ஸ்ரீதர், சதீஷ், சாஜு, ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டமும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் திருவொற்றியூர் மத்திய பகுதி சார்பில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி அவர்களின் வழிகாட்டுதலின்படி சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ் சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளர் – இரண்டாவது மண்டல குழு தலைவர் ஏ. வி. ஆறுமுகம் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் கழக அமைப்பு செயலாளரும் மாநிலங்களவை முன்னாள் உறுப்பினருமான ஆலந்தூர் ஆர். எஸ். பாரதி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் கலாநிதி வீராசாமி எம்.பி., கே. பி. சங்கர் எம்.எல்.ஏ., வா. முத்துசாமி, சாலை டி. கணேசன், மு. செல்வம், மற்றும் பல நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### நெல்லை மாவட்டத்தில் - முன்னோடிகளுக்குப் பொற்கிழி - அரசு நிகழ்ச்சிகள் - இளைஞரணி செயல்வீரர் கூட்டங்கள்!

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள்!

### நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் ஆய்வு! இரா.ஆவுடையப்பன் - டி.பி.எம்.மைதீன்கான் முன்னிலை!

நெல்லை, அக்.15-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 26.10.2023 வியாழன் அன்று நெல்லை மாவட்டத்தில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கிடவும், இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்கவும் உள்ளதை முன்னிட்டு அதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களை நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் முன்னிலையில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்டம் தோறும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல், இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் மற்றும் அரசு ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று நலத்திட்ட உதவிகள் வழங்குதல் போன்ற நிகழ்வுகளில் கலந்து வருகிறார்.

தூத்துக்குடி, தென்காசி மாவட்டத்தில் சுற்றுப்பயணத்தை முடித்த நிலையில் வருகிற 26.10.2023 வியாழன் அன்று நெல்லை மாவட்டத்திற்கு வருகை தருகிறார்கள்.

அதன்படி ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்தின் சார்பில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல்,கழக இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம்,அரசு நிகழ்வு போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நெல்லைக்கு வருவதை முன்னிட்டு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் சிறப்பாக செய்து வருகின்றனர்.

பாளையங்கோட்டை கே.டி.சி.நகரில் உள்ள மாதா மாளிகையில் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியும், அதனை தொடர்ந்து கே.டி.சி நகர் மேம்பாலம் பகுதியில் உள்ள திறந்தவெளி மைதானத்தில் இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் மேடை அரங்கு அமைக்கப்பட்டுவரும் இடங்களை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் என். மாலைராஜா,மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட அவைத் தலைவர் மா.கிரகாம்பெல், மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கண்ணன், பரமசிவ ஐயப்பன், மேயர் பி.எம். சரவணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ், தர்மன், அப்துல் கையூம், மாவட்டப் பொருளாளர் அண்ணாதுரை, ஒன்றிய செயலாளர்கள் முருகன், செல்வ கருணாநிதி, சுடலைக்கண்ணு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் ஜான்ரபீந்தர், வில்சன் மணித்துரை, கருப்பசாமி கோட்டையப்பன், மாவட்ட அணி அமைப்பாளர் வழக்கறிஞர் அணி செல்வசூடாமணி, தொண்டர் அணி தொப்பி மைதீன், ஆதிதிராவிடர் நலக்குழு நவநீதன், பொறியாளர் அணி சுரேந்தர், நெசவாளர் அணி ஸ்டீபன், விவசாய அணி முருகன், துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி மீரான்மைதீன், அலிஃப்மீரான்,

நெசவாளர் அணி சங்கரலிங்கம், பகுதி செயலாளர்கள் பாளை அன்டன் செல்லதுரை, நெல்லை நமச்சிவாயம், ரத்தினபாலா, மணி கண்டன், அருண்குமார், சுப்ரீத் சுப்பிரமணியன், சங்கரன்கோவில் சங்கரநாராயணசாமி கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் வழக்கறிஞர் து.சண்முகையா உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை! ஏ.வி.ஆறுமுகம் ஏற்பாட்டில்

# திருவொற்றியூர் மத்திய பகுதியில் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் ஆர்.காந்தி - ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் - தி.மு.தனியரசு பங்கேற்பு!

சென்னை, அக்.15-

திருவெற்றியூர் மத்திய பகுதி செயலாளரும், இரண்டாவது மண்டலக்குழு தலைவருமான ஏ.வி. ஆறுமுகம் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 13.10.2023, வெள்ளிக்கிழமையன்று மாலை பார்த்த சாரதி தெரு, மணலியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டக்கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், எம்.எல்.ஏ, தலைமை வகித்தார்.

இராணிப்பேட்டை ஆர். காந்தி, ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்பி. கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, தி.மு.தனியரசு எம்.சி. எம். நந்தகோபால், வை.மா. அருள்தாசன், வ.முத்துசாமி, ஆர். டி. ரமேஷ்குமார், வி.ஜி.தினகரன், நூர்கா கோதண்டம், என்.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஸ்டாலின், பா.செல்வராஜ் என்.விஜயரங்கன், எ.ஞானமூர்த்தி, எஸ்.ஸ்ரீதர், சாலை டி.கணேசன், மு.செல்வம், டி.கரிகாலச்சோழன், மிசா.பா.மதிவாளன், வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு. ராஜேந்திரன், டி.ராம கிருஷ்ணான். அறிவழகி, எம். ஆனந்தன், என்.பரந்தாமன், ஜெ.ஜெ.ஜெய்மதன், டி.ஏ.ராஜி இரா.முருகேசன், பி.சாந்தி,

புழல்.எம்.நாராயணன், ஜி.துக்காராம், ஜி.தயாளன் மி.வே.கருணாகரன், பெ.சரவணன், ஜிபராஜேந்திரன், ந.திருசங்கு, இ.குமரவேல், யு.எஎம்.குறலரசன், அ.இந்துமதி, எம்.வஜ்சிரவேல், ஆர்.சி.ஆசைதம்பி, எம்.பி.குமார், ஆர்.எஸ்.சம்பத், கே.பிராபாவதி, இரா.குமரேசன், நா.கார்த்திகேயன், டி.சி.வி.மணிகண்டன், எம்.எல்.சரவணன், குறுத்து சி.முனுசாமி, க.பி.சதீஷ்குமார்,

கேபிள்டிவி எம்.ராஜா, ஆர்.சுந்தர், ஏ.கா.கார்த்திகேயன், மு.சிவக்குமார், எம்.ஜெயசந்திரன், மு.மாணிக்கவேல், பி.தமிழரசு, கே.கர்ணன், கே.பி.சொக்கலிங்கம், கே.பவுல், எஸ்.தமிழ்ச்செல்வன் டி.சி.வி. ராஜகுமாரி, உமா சரவணன், சரண்யா கலைவாணன், சுசிலா ராஜா, பானுமதி சுந்தர், ஆர். தினேஷ்குமார், எம்.சந்திரகுமார், எம்.ஆர்.மலைராஜ், வி.வீரமுத்து, இ.வி.சரவணன்,

ஆர். மோகனசுந்தரம், பொன். கோ.விஜயன், எம். மகேந்திரன், எம்.ஆறுமுகம், ஜி.தினேஷ், எஸ்.கணேஷ், எம்.ராம்குமார், ஓய்.ரஜினி நந்தி, ஆர்.ரஜினிபாபு, பி.எஸ்.சைனஸ், எஸ்.பாஸ்கர், ஆர்.டில்லி, டி.டி.எம். பாபு, வி.பழனிவேல் சந்தானகிருஷ்ணன், கே. கார்த்திகேயன், மா.ஜெயராமன், மா.எத்திராஜ், அ.அப்துல்சலீம்,

ஆர். டி. மதன்குமார், கேபிள்டிவி. த.கணேசன், சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், மோரை மு.சதீஷ்குமார், டி.ஜி.ஆர்.மணிவண்ணன், ஜி.கே.இனியவன், இ.ஏழுமலை, வி.எஸ்.கே. ஜெயக்குமார், இ.மோகன், ஆர்.விஜயலட்சுமி, சி.கே.கோபால். எம்.பி.நடராஜன், எ.சந்திரன், பி.ஏழுமலை, ஜி.தயாநிதி, கே.சுபிலன், பி.அன்பு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருவெற்றியூர் மத்திய பகுதி பொருளாளர் எம். எஸ்.தாகலிங்கம் நன்றி கூறினார்.

கூட்ட ஏற்பாட்டினை சென்னை வடகிழக்கு மாவட்டம் - திருவெற்றியூர் மத்திய பகுதி செய்திருந்தது.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, வாக்குச் சாவடி பாகமுகர்கள் (பிஎல்ஏ2) வாக்குச் சாவடி பாக உறுப்பினர்கள் (பிஎல்சி) பணிகள் குறித்து திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி ஒன்றிய பேரூர் செயலாளகள், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சடமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் முன்னிலையில் கும்முடிப்பூண்டி தொகுதி பொறுப்பாளரும், கழக செய்தி தொடர்பு துணைத் தலைவர் பி.டி.அரசகுமார். பங்கேற்று, வாக்குச் சாவடி பாக முகவர்கள் செயல்பாடுகள் குறித்து கருத்துக்களை வழங்கினார். கூட்டத்:தில் ஜெ.மூர்த்தி, எஸ்.ரமேஷ், சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், வெ.அன்புவாணன், பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் மு.மணிபாலன், டி.கே.சந்திரசேகர், ஆ.சத்தியவேலு, ந.பரிமளம், ஜான் (எ) பொன்னுசாமி, இரா.அறிவழகன், அமைப்பாளர்கள் கே.வி.லோகேஷ், மு. பாஸ்கரன், டி.மணி, கே.ஆறுமுகம், கோல்டுமணி, ஜி.ரமேஷ், ஜெயலலிதாசிதரன், வில்சன் நிலவழகன், சி.சுமன், க.சம்பத் மாணவரணி டி.ஜெ.ஜி.தமிழரசன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### நந்தனம மதி தலைமை! எஸ்.முரளி முன்னிலையில்

# மயிலை மேற்கு பகுதி வட்டங்களில் கழக கொடியேற்று விழா!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. பங்கேற்பு!

சென்னை, அக். 15 -

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி தி.மு.க சார்பில் மயிலை தொகுதியில் 'கொடி பறக்குது' மயிலை மேற்கு பகுதி அனைத்து வட்டங்களிலும் இன்று (15.10.2023) ஞாயிற்றுகிழமை, காலை 8 மணி முதல் புதிய கழக கொடியேற்றும் விழா நடைபெறுகிறது.

மயிலை மேற்கு பகுதி கழக முன்னோடிகள் கொடியேற்றுவார்கள்.

மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி தலைமை வகிக்கிறார்கள்.

மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, ஜி. ஆர். இராஜேந்திரன், ஆர்.எல்.வி.அசோக்குமார், பா.பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன் வி. முருகையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

டி.ராஜவேலு சீ. கிருஷ்ணமூர்த்தி எஸ்.ஆர்.ராஜாசு ரேஷ்குமார் அ.நாகராஜன் மு.இ.ஏழுமலை மூ.இராசேந்திரன் தினேஷ்மாணிக்கம் வரவேற்கின்றனர்.

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் - மயிலாப்பூர் சட்ட மன்ற உறுப்பினர் மயிலைத. வேலு, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் கழக கொடியேற்றுகின்றனர்.

இதில் மாநில மாவட்ட நிர்வாகிகள் எஸ்.மோகன், நந்தனம் நம்பிராஜன், மு. தம்பிதுரை, சி.தசரதன், டாக்டர் ஜெ.அருண், டாக்டர் கலைகதிரவன், ஆ.சந்திரசேகர், நந்தனம் வேதா, மு.சத்யா, கே.மலர், என். அன்பழகன், கோ.சு.மணி, செல்வி சௌந்தரராஜன், மந்தைவெளி அ.பாபு, யோகேஷ்ரவி, வேலுசம்பந்தம், எம்.ஆறுமுகம், அ.வாசுதேவன், ஜெ.ஜானகிராமன், ஜி.டி.அம்பேத்கார்,

மயிலை சிலை பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.முனுசாமி, பி.எல்.தாஸ், ஏ. குமாரி, எல்.உதயகுமார், மயிலை பகுதி வட்ட செயலாளர்கள் ஏ.தாஸ், மா. பா.அன்பு, அ.தவநேசன், வி.வெற்றிவேல் கோ.கண்ணன், துரைபார்த்திபன், பா.பொன்னுசாமி, மயிலை பகுதி மாமன்ற உறுப்பினர்கள் விமலாகிருஷ்ணமூர்த்தி எம்.சி., அ.ரேவதி எம்.சி., கீதாமுரளி எம்.சி. அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ராஜா அன்பழகன், எஸ். சரவணன், எஸ்.பானுசலீம், விஜய்வெங்கடேசன், ஆர். கதிரவன், மா ஆர்.பானு, மோனிஷா, சி. கணேஷ் பாண்டியன், ம.ஆனந்தன், பூலியூர் டி.மேசஸ், ச.சண்முகநாதன், சந்தோம் ஆ.அந்தோணி, ஜெ.ஜெகன்ராஜ், ஆர்.குமரன், ஏ.சத்திய மூர்த்தி, டாக்டர் கோ.சக்தி விக்னேஷ், என்.எஸ்.பாலசுப்பிரமணி, இரா.சக்கரவர்த்தி கே.வெங்கட்ராமன் பி.கே.ராஜேஷ்கண்ணா மற்றும் மயிலை கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள், மயிலை பகுதி அனைத்து அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி கிழக்கு, மேற்கு அமைப்பாளர்கள் மற்றும் பகுதி, வட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள் பா முக வர்கள் கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்கின்றனர்.

நன்றியுரை: ச.லோகநாதன், வீ.செங்குட்டுவன், வேன்சிவா, நா.சேகர், மு.ஏ.முல்லை வேந்தன், கே.விஜயகுமார், ந.கிருஷ்ணகுமார், ம.எழில்ராஜ்

மாநில சிறுபான்மை நல உரிமைப் பிரிவு சார்பாக

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா

முன்னிட்டு

மாபெரும் கருத்தரங்கம்

நாள் : 15.10.2023 ஞாயிறு காலை 10.00 மணியளவில்

இடம் : P.தண்டபாணி முதலியார் திருமணமண்டபம், வேலூர்

தலைமை : டாக்டர் அ.சுபேர்கான் MS (Ortho) மாநில செயலாளர்

வரவேற்புரை : எம்.நூருல்லா Ex. MC., மாநில துணை செயலாளர்

மாண்புமிகு கழக பொதுச் செயலாளர்- கனிமவளம் மற்றும் நீர்பாசனத்துறை அமைச்சர்

துரைமுருகன் எம்.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., அவர்கள்

மாண்புமிகு R.காந்தி MLA., கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர்

மாண்புமிகு செஞ்சி K.S.மஸ்தான் MLA., சிறுபான்மை நலன் (ம) வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்

அந்தியூர் செல்வராஜ் MP., கழக துணை பொதுச்செயலாளர்

திருமிகு A.P.நந்தகுமார் MLA., மாவட்ட செயலாளர்

முனைவர் சுபாபதி

திருமிகு. மோகன் மு. துணைவேந்தர்

திருமிகு. தி.அ.முகமதுஜகி BABL.,Ex.MP., கழக தனிக்கைக்குழு உறுப்பினர்

திருமிகு ப.கார்த்திகேயன் MLA., மாநகர செயலாளர், முன்னாள் மேயர்

திருமிகு. D.M.கதிர் ஆனந்த் MP., கழக அமைப்பு சாரா ஓட்டுநர் அணி தலைவர்

திருமதி. அமலுவிஜயன் MLA., குடியாத்தம்

திருமதி. சுனோதா B.Sc.,B.Ed., வேலூர் மாநகர மேயர்

மு.பாபு மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர்

நன்றியுரை : S.தென்னிக் அகமது வேலூர் மாவட்ட அமைப்பாளர்

நிகழ்ச்சி ஏற்பாடு மாநில தி.மு.க. சிறுபான்மை நல உரிமைப் பிரிவு, வேலூர்.